# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை-8.

## காவல் சார்பு ஆய்வாளர் பதவிகளுக்கான நேரடி தேர்வு - 2023

## [தாலுகா, ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை (ஆண், பெண் & திருநங்கை)]

## அறிவிக்கை எண்:01/2023

தேதி:05.05.2023

**1.** தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், காவல் சார்பு ஆய்வாளர் (தாலுகா, ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை) பதவிகளுக்கான நேரடி தேர்வு 2023-க்கு (இந்திய குடியுரிமையுடையவர்கள் மட்டும்) விண்ணப்பதாரர்களிடமிருந்து இணைய வழி விண்ணப்பத்தினை (Online Application) வரவேற்கிறது. ஊதிய விகிதம் ரூபாய்.36,900 - 1,16,600.

**இத்தேர்வுக்கான முக்கிய தேதிகள்**

| | | | |
|---|---|---|---|
| i | அறிவிக்கை தேதி | | 05.05.2023 |
| ii | இணைய வழி விண்ணப்பம் துவங்கும் தேதி | | 01.06.2023 |
| iii | இணைய வழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | | 30.06.2023 |
| iv | எழுத்துத் தேர்வு நடைபெறும் தேதி | பொது விண்ணப்பதாரர்கள் | ஆகஸ்ட் மாதம் 2023-ல் நடைபெறும். சரியான தேதி பின்னர் அறிவிக்கப்படும். |
| | | 20% துறை விண்ணப்பதாரர்கள் | |

**2.** காலிப்பணியிடங்கள்: 615 + 6 (பின்னடைவு காலிப்பணியிடங்கள்*)

| பதவியின் பெயர் | பணி விதிகள் | காலிப்பணியிடங்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண்கள் | பெண்கள் | |
| காவல் சார்பு ஆய்வாளர் (தாலுகா) | தமிழ்நாடு காவல் சார் நிலைப் பணி விதிகள் | 255 + 2* | 109 | 364 + 2* |
| காவல் சார்பு ஆய்வாளர் (ஆயுதப்படை) | | 99 + 3* | 42 + 1* | 141 + 4* |
| காவல் சார்பு ஆய்வாளர் (த.நா.சி.கா.படை) | தமிழ்நாடு சிறப்பு காவல் சார் நிலைப் பணி விதிகள் | 110 | - | 110 |
| | **மொத்தம்** | **464 + 5*** | **151 + 1*** | **615 + 6*** |

* பின்னடைவு காலிப்பணியிட விவரங்கள் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

**3. ஒதுக்கீடுகள்:**

| ஒதுக்கீட்டு விவரம் | மொத்தக் காலிப்பணியிடங்களில் ஒதுக்கீட்டு சதவீதம் | | காலிப்பணியிட எண்ணிக்கை | தகுதிகள் |
|---|---|---|---|---|
| காவல்துறைக்கான ஒதுக்கீடு | 20% | | 123 | 20% தமிழ்நாடு காவல் சார் நிலை பணிகள் மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் சார் நிலை பணி விதிகளில், விதி 14-ல் உள்ள தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். |
| பொது - சார்ந்துள்ள வாரிசு ஒதுக்கீடு | 10% | மீதமுள்ள 80% காலிப் பணியிடங்களில் 20% | 49 | 9% காவல்துறையிலுள்ள களப்பணியாளர்களின் வாரிசுகள் மற்றும் 1% அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகள். |
| பொது - விளையாட்டிற்கான ஒதுக்கீடு | 10% | | 49 | அங்கீகரிக்கப்பட்ட 16 விளையாட்டுப் போட்டிகளில் தேசிய, தமிழகத்தின் சார்பாக மற்றும் தமிழக பல்கலைக்கழகங்கள் சார்பாக விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றவர்கள். |

**குறிப்பு:**

i. காவல்துறை விண்ணப்பதாரர்கள், பொது மற்றும் துறை ஒதுக்கீட்டிற்கான தகுதிகள் பெற்றிருப்பினும், தனித்தனி விண்ணப்பமாக சமர்பிக்காமல் இணையவழி விண்ணப்பத்தில் **"பணியில் முன்னனுபவம்"** என்ற பக்கத்தில் **"BOTH"** என்பதைத் தேர்வு செய்து **ஒரே விண்ணப்பமாக** சமர்பிக்க வேண்டும்.

ii. காவல்துறை ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்களுக்கு, முதன்மை எழுத்துத் தேர்வு தனியாக நடைபெறும்.

iii. பொது விளையாட்டு ஒதுக்கீட்டில் தேர்வு செய்திட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், பொது சார்ந்துள்ள வாரிசு ஒதுக்கீட்டிலுள்ளவர்களைக் கொண்டு நிரப்பப்படும். இருப்பினும், பொது வாரிசு ஒதுக்கீடு மற்றும் விளையாட்டு ஒதுக்கீட்டின் மொத்த சதவீதம் 20% மிகாமல் பின்பற்றப்படும்.

iv. வாரிசு ஒதுக்கீட்டில் தேர்வு செய்திட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், அந்தக் காலிப்பணியிடங்கள், பொது ஒதுக்கீட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டு வகுப்பு வாரியாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.

v. துறை ஒதுக்கீட்டில் தேர்வு செய்திட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், அந்தக் காலிப்பணியிடங்கள், பொது ஒதுக்கீட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டு வகுப்பு வாரியாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.

vi. ஒவ்வொரு ஒதுக்கீட்டினுள்ளும் வகுப்புவாரி இட ஒதுக்கீடு தற்போது நடைமுறையிலுள்ள அரசு விதிகளின்படி வழங்கப்படும்.

**4. தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை (PSTM):** பொது விண்ணப்பதாரர்கள் 1 முதல் 12வது வகுப்பு வரை மற்றும் இளங்கலைப்பட்டம் முழுவதுமாக தமிழ்வழியில் பயின்றிருந்தால், தேர்வின் ஒவ்வொரு நிலையிலும் 20% முன்னுரிமை அளிக்கப்படும். துறை சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கு இம்முன்னுரிமை பொருந்தாது.

**5. வயதுத் தகுதிகள்:** விண்ணப்பதாரர்கள் 01.07.2023 அன்று 20 வயது நிறைவு பெற்றவராகவும் மற்றும் 30 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். சில பிரிவினருக்கு வயது உச்சவரம்புத் தளர்வு கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.

| பிரிவுகள் | உச்ச வயது வரம்பு |
|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | 32 வயது |
| ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) / பழங்குடியினர் | 35 வயது |
| திருநங்கைகள் | 35 வயது |
| ஆதரவற்ற விதவைகள் | 37 வயது |

| | |
|---|---|
| முன்னாள் இராணுவத்தினர் / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவப் படைவீரர்கள் மற்றும் முன்னாள் மத்திய ஆயுத காவல்படையினர். | 47 வயது |
| 20% காவல்துறை ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் | 47 வயது |

குறிப்பு: காவல்துறை விண்ணப்பதாரர்கள், பொது ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பதற்கு, பொது ஒதுக்கீட்டு விண்ணப்பதாரர்களுக்கான அனைத்துத் தகுதியினையும் பெற்றிருக்க வேண்டும்.

**6. கல்வித் தகுதி:** விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானிய குழு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து/கல்வி நிறுவனங்களிலிருந்து 10+2+3/4/5 என்ற முறையில் பெற்ற இளங்கலைப் பட்டம் அல்லது 10+3+2/3 என்ற முறையில் பட்டயப்படிப்பு படித்த பின்னர் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் திறந்தவெளி பல்கலைக்கழகம் மூலம் நேரடியாக இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், மேற்கண்ட முறையில் இளங்கலைப் பட்டம் பெறாமலிருந்தால், விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

**7. இடஒதுக்கீடு:** வகுப்பு வாரி இட ஒதுக்கீடு மற்றும் பெண்களுக்கான இடஒதுக்கீடு, நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்பற்றப்படும். தமிழ் நாடு அரசால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ் பெற்றவர்கள் மட்டுமே வகுப்புவாரி ஒதுக்கீட்டில் பரிசிலீக்கப்படுவார்கள். வகுப்பு வாரியான ஒதுக்கீடு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| | |
|---|---|
| பொதுப் பிரிவினர் | 31% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | 3.5% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | 20% |
| ஆதிதிராவிட வகுப்பினர் | 15% |
| ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர் | 3% |
| பழங்குடியின வகுப்பினர் | 1% |

**8. தேர்வு நிலைகள்:**

| வ. எண் | தேர்வு நிலை | பொது ஒதுக்கீடு தேர்வு | துறை ஒதுக்கீடு தேர்வு |
|---|---|---|---|
| 1. | எழுத்துத் தேர்வுகள் | பிரிவு-I தமிழ் மொழித் தகுதித் தேர்வு கொள்குறி வகைத்தாள் - 100 மதிப்பெண்கள் | |
| | | பிரிவு- II (அ) பொது அறிவு (ஆ) உளவியல் கொள்குறி வகைத்தாள் - 70 மதிப்பெண்கள் | பிரிவு-II (அ) பொது அறிவு, (ஆ) உளவியல், சட்டம் மற்றும் காவல் நிர்வாகம் தொடர்பான பாடங்கள் கொள்குறி வகைத்தாள் - 85 மதிப்பெண்கள் |
| 2. | சான்றிதழ்கள் சரிபார்த்தல் மற்றும் உடற்தகுதித் தேர்வுகள் | உடற்கூறு அளத்தல் மற்றும் உடற்தகுதித் தேர்வு ஆகியன தகுதித் தேர்வாகும். | துறை ஒதுக்கீட்டிற்கான விண்ணப்பதாரர்களுக்கு உடற்கூறு அளத்தல் மற்றும் உடற்திறன் போட்டிகளில் கலந்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு உடற்தகுதித் தேர்வு உண்டு. இது தகுதித் தேர்வாகும். |
| | | உடற்திறன் போட்டிகளுக்கான அதிகபட்ச மதிப்பெண்கள் - 15 | |
| 3. | நேர்காணல் தேர்வு | 10 மதிப்பெண்கள் | 10 மதிப்பெண்கள் |
| 4. | சிறப்பு மதிப்பெண்கள் | 5 மதிப்பெண்கள் (தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித்திட்டம் மற்றும் விளையாட்டுகள்) | 5 மதிப்பெண்கள் (தேசிய காவல் பணித்திறன் போட்டிகளில் பதக்கம் பெற்றிருக்க வேண்டும்). |
| | **மொத்தம்** | **100 மதிப்பெண்கள்** | **100 மதிப்பெண்கள்** |

**குறிப்பு:**

i. தமிழ் மொழித் தகுதித் தேர்வில் குறைந்தபட்சம் 40 மதிப்பெண்கள் (40%) பெற்ற விண்ணப்பதாரர்களுடைய முதன்மை எழுத்துத் தேர்வின் OMR விடைத்தாள்கள் மட்டுமே மதிப்பீடு செய்யப்படும்.

ii. 20% துறை சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கும், பொது ஒதுக்கீட்டில் விண்ணப்பிப்பவர்களுக்கும் தமிழ் மொழித் தகுதித் தேர்வு ஒரே தேர்வாக நடத்தப்படும்.

iii. துறை விண்ணப்பதாரர்கள், பொது பிரிவு மற்றும் துறைக்கான ஒதுக்கீடு இரண்டிலும் பங்கு பெற விண்ணப்பித்திருப்பின் தமிழ் மொழி தகுதித் தேர்வினை ஒருமுறை மட்டுமே எழுத வேண்டும்.

iv. எழுத்துத் தேர்வில் தகுதி மதிப்பெண்ணாக பொது விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 25 மதிப்பெண்களும், துறை விண்ணப்பதாரர்கள் 30 மதிப்பெண்களும் பெறவேண்டும். இருப்பினும், அடுத்த கட்டத் தேர்வான அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு மற்றும் உடற்திறன் போட்டிகளுக்கு மொத்தக் காலிப்பணியிட எண்ணிக்கையில் 1:5 என்ற விகிதாச்சாரப்படி விண்ணப்பதாரர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள். இதுபோன்று நேர்காணலுக்கும், மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையில் 1:2 என்ற விகிதாச்சாரப்படி விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவார்கள்.

**9. எழுத்துத் தேர்வு மையம்:** எழுத்துத் தேர்வுக்கான அழைப்புக் கடிதத்தில் எழுத்துத் தேர்வு மைய விவரம் தெரிவிக்கப்படும். எழுத்துத் தேர்வு மையங்களை கூட்டவோ, குறைக்கவோ அல்லது ஒரு விண்ணப்பதாரரை பிற மையத்திற்கு நிர்வாக காரணத்தினால் மாற்றவோ இவ்வாரியத்திற்கு உரிமை உண்டு.

**10. தேர்வுக் கட்டணம்:** விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கட்டணமாக ரூ.500/-ஐ செலுத்த வேண்டும். காவல்துறை விண்ணப்பதாரர்கள், பொதுப்பிரிவு மற்றும் துறைக்கான ஒதுக்கீடு இரண்டிலும் பங்குபெற விண்ணப்பித்தால் தேர்வுக் கட்டணமாக ரூ.1000/-ஐ செலுத்த வேண்டும். தேர்வுக் கட்டணத்தை இணையதள வழி (இணையதள வங்கி / UPI/வங்கி கடன் அட்டை/வங்கி பற்று அட்டை) மற்றும் இணையமில்லா வழியில் செலுத்துச் சீட்டு மூலம் SBI வங்கியில் செலுத்தலாம்.

**11. இணையவழி விண்ணப்பம்:** விண்ணப்பதாரர்கள் இவ்வாரிய www.tnusrb.tn.gov.in இணையதளத்தின் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஏனைய இதர வழிகளில் விண்ணப்பித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தபால் மூலமாக அழைப்புக் கடிதம் அனுப்பப்படமாட்டாது.

**12. தற்காலிகத் தெரிவு:** நேர்காணல் தேர்விற்குப் பின்னர் விண்ணப்பதாரர்கள், முதன்மை எழுத்துத் தேர்வு, உடல்திறன் தேர்வு, நேர்காணல் மற்றும் சிறப்பு மதிப்பெண்கள் ஆகியவற்றில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் வகுப்புவாரி மற்றும் இதர ஒதுக்கீட்டின் விதிகளைப் பின்பற்றி தற்காலிகமாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

13, **மருத்துவப் பரிசோதனை மற்றும் குணநலன்கள் மற்றும் முந்தைய பழக்கவழக்கங்களை சரிபார்த்தல்** : காவல் சார்பு ஆய்வாளர் பதவிக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனை மற்றும் குணநலன்கள் முந்தைய பழக்கவழக்கங்கள் விசாரித்து சரிபார்க்கப்படும்.

**14.** இத்தேர்விற்கான கூடுதல் தகவல்கள், உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு மற்றும் உடற்திறன் போட்டிகளுக்கான விதிமுறைகள் ஆகியவை தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை விண்ணப்பதாரர்கள் இவ்வாரிய இணையதளமான **www.tnusrb.tn.gov.in** –லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

**15.** விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தினை, சமர்ப்பிப்பதற்கு முன்னர், இவ்வாரிய இணையதளத்திலுள்ள (**www.tnusrb.tn.gov.in**) அறிவிக்கை மற்றும் தகவல் சிற்றேட்டினை கவனமாக படித்து அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்,
சென்னை-08.